**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.73/2017**

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் நாள் புதன்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.04.2024 | தந்தை பெயர்: | ஆறுமுகசாமி |
| பெயர்: | செல்வஅய்யனார்<br>(PW-2 Chief ) | வயது : | 53/2024 |
| கிராமம்: | சீர்காழி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | | |

<u>முதல் விசாரணை : 24.04.2024.</u>

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

02.02.1976-ம் தேதியிட்ட எனது தாயார் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 1986 முதல் 2017 வரை செலுத்திய வீட்டு வரி ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது** (எண்ணிக்கை-7) தாவா சொத்திற்கு உள்ள வீட்டிற்கு 2015 மற்றும் 2017 மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.3 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது** (எண்ணிக்கை-2) 26.04.1890-ம் தேதியிட்ட தாவா புல எண்ணிற்கான மூல பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 06.04.1893-ம் தேதியிட்ட தாவா புல எண்ணிற்கான கிரய பத்திரத்தின் (ஆவண எண்.561/1893) சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 12.03.1910-ம் தேதியிட்ட தாவா புல எண்ணிற்கான மூல பத்திரத்தின் (ஆவண எண்.466/1910) சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.6**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 07.05.1923–ம் தேதியிட்ட தாவா புல எண்ணிற்கான மூல பத்திரத்தின் (ஆவண எண்.796/1923) சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 30.05.1934–ம் தேதியிட்ட தாவா புல எண்ணிற்கான மூல பத்திரத்தின் (ஆவண எண்.874/1934) சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் வழக்கு எண்.58/1950–ன் Suit Register extract–ன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.9 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** 20.10.1961–ம் தேதியிட்ட தாவா புல எண்ணிற்கான மூல பத்திரத்தின் (ஆவண எண்.3435/1961) சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ–10 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** அசல் வழக்கு எண்.75/1963–ன் Suit Register extract–ன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.11 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** 24.11.1974–ம் தேதியிட்ட தாவா புல எண்ணிகான கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்மந்தமில்லாது என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது.) நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் முறையே நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆகவும் நில அளவையரின் அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.3 மற்றும் நீ.ம.சா.ஆ.4 ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.